## கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கடலூர்

## O.S.No. 24 of 2021

| | |
|---|---|
| பெயர் | : பன்னீர்செல்வம் |
| தந்தை பெயர் | : குமாரசாமி |
| வயது | : 70 |
| தொழில் | : வேலை ஏதும் பார்க்கவில்லை |
| முகவரி | : கடலூர் |

1969-ம் ஆண்டு 14வது சட்டத்தின் படி 12வது பிரிவின் கீழ் 19.07.2025 அன்று **செல்வி. பா.பெபேயா, பி.ஏ., எல்.எல்.பி.,** கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, கடலூர் அவர்களால் சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

நான் இந்த வழக்கில் 1 -ம் வாதி ஆவேன். என்னை வாதி தரப்பு சாட்சி -1 ஆக விசாரணை செய்யவும் எனது முதல் விசாரணையை பதிவு செய்யவும் ஆஜராகியுள்ளேன். என்னிடம் காட்டப்படும் சத்திய பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் என்றும் அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும் படித்துக்காண்பிக்கப்பட்டது என்றும் சத்தியமாய் சொல்கிறேன்.

கீழே கண்ட ஆவணங்கள் குறியீடு செய்ய தாக்கல் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. | 26.02.2020 | பொது அதிகார ஆவணத்தின் சான்றிட்ட நகல் | **வா.த.சா.ஆ.1** |
| 2. | 24.01.2021 | தினமலர் நாளிதழில் விளம்பரம் | **வா.த.சா.ஆ.2** |
| 3. | 24.01.2021 | வழக்கறிஞர் அறிவிப்பு அசல் | **வா.த.சா.ஆ.3** |

வா.த.சா.ஆ.1 முதல் வா.த.சா.ஆ.3 வரை குறியீடு செய்யப்படுகிறது.

PHEBE B

Digitally signed by PHEBE B
Date: 2025.07.19 16:51:47 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கடலூர்

**O.S.No.24/2021** தேதி:**19.07.2025**

வாதி தரப்பு சாட்சி -1 (பன்னீர்செல்வம் , த/பெ.குமாரசாமி) சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

1) யாருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் உஷா முருகன் என்பருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளேன்.அவர்களை எனக்கு எப்படி தெரியும் என்றால் அவர்கள் பைனாஸ் செய்து வருகிறார்கள் அதனால் தெரியும். எவ்வளவு ஆண்டுகளாக தெரியும் என்றால் 10 வருடத்திற்கு மேலாக தெரியும்.இந்த வழக்கு சொத்து எந்த ஊரில் உள்ளது என்றால் திருமலைநகர் மஞ்சக்குப்பத்தில் உள்ளது.

2) வழக்கு எதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் பவர் பத்திரம் ரத்து செய்ய கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பவர் எப்போது அளிக்கப்ப்பட்டது என்றால் தேதி எனக்கு நியாபகம் இல்லை. யாருக்கு கொடுத்தேன் என்றால் உஷா மற்றும் முருகன் இருவருக்கும் சேர்த்துதான் கொடுத்தேன். அது பதிவு செய்யப்ட்ட ஆவணம் என்றால் சரிதான். அதில் யார் சாட்சி கையொப்பம் போட்டு உள்ளார்கள் என்றால் எனக்கு நியாபகம் இல்லை. பத்திரம் யாரால் எழுதப்பட்டது என்றால் எனக்கு நியாபகம் இல்லை. பவர் எங்கு எழுதப்பட்டது என்றால் எனக்கு நியாபகம் இல்லை.

3) எவ்வளவு ரூபாய் பணம் பிரதிவாதிகளிடம் இருந்து வாங்கிக் கொண்டு பத்திரம் எழுதிக்கொடுத்தேன் என்றால் எனக்கு நியாபகம் இல்லை.அந்த

பத்திரத்திற்கு ரூபாய் வாங்கீனேன் என்றால் எனக்கு நியாபகம் இல்லை.

4) பவர் பத்திரம் எழுதிய தேதியில் வேறு ஆவணம் கையெழுத்து இட்டேனா என்றால் இல்லை. பவர் பத்திரம் எழுதுவதற்கு 2 வருடங்களுக்கு முன்பு கிரைய ஒப்பந்தம் எழுதப்பட்டது என்றால் சரிதான் . அது பதிவு செய்யப்படாத ஆவணம் அது என்று எழுதப்பட்டது என்று எனக்கு நியாபகம் இல்லை.

5) கிரைய ஒப்பந்தம் எழுதப்பட்ட தேதியில் எவ்வளவு ரூபாய் வாங்கினேன் என்றால் எதுவும் வாங்கவில்லை. வழ்க்கு தாவா சொத்தில் யார் யார் குடி இருக்கிறோம் என்றால் நான் எனது மணைவி ராஜகுமாரி மகன் வேல்முருகன் மருமகள் ராஜலட்சுமி மற்றும் இரு பேரப்பிள்ளைகள் குடியிருக்கிறோம்.

6) நாங்கள் ஒரே வீட்டில் ஒன்றாகத்தான் குடியிருக்கிறோம் என்றால் சரிதான்.இந்த வழக்கில் முருகன் மற்றும் உஷாவும் தாவா சொத்தில் இருந்து வெளியேற மிரட்ட வில்லை என்றால் சரிதான். பணத்தினை மட்டுமே திரும்ப கேட்கிறார்கள் என்றால் சரிதான். தாவா சொத்து சம்மந்த்மாக 08.06.2018 ல் நானும் பிரதிவாதியும் சேர்ந்து ரூபாய் 16 லட்சத்திற்கு விலை பேசி 14 லட்சத்தினை முன் தொகையாக பெற்றுக்கொண்டு கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொண்டோம் என்றால் சரியல்ல.

7) அதே தேதியில் அந்த கிரைய ஒப்பந்தம் கடலூர் இணை I சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.1716/2018 என்ற எண்ணில் பதிவு செய்யப்ப்ட்டது என்றால் சரியல்ல.

8) அந்த கிரைய ஒப்பந்த்தின் படி பிரதிவாதிகள் மீதி தொகையை தயாராக வைத்து என்னை அனுகிய போது கிரையம் ஏற்படுத்திக்கொடுக்கபட வில்லை என்றால் அவர்கள் வரவே இல்லை .கிரைய ஒப்பந்தத்தினை நிறைவேற்ற தவறும்பட்சத்தில் முன் தொயையினை இழக்க வேண்டி இருக்கும் என்று

வழக்கறிஞர் அறிவிப்பு ஏதேனும் பிரதிவாதிகளுக்கு கொடுத்தேனா என்றால் இல்லை.

9) தாவா சொத்தை விலை ஏற்றத்தின் காரணமாக ரூபாய் 16 லட்சத்திற்கு கிரையம் கொடுக்க முடியாது என்று நான் கிரையம் ஏழுதிக்கொடுக்க மறுத்தேன் என்றால் சரியல்ல. அதன்பின்னிட்டு நானும் பிரதிவாதியும் தாவா சொத்து சம்மந்தமாக அமர்ந்து இருதரப்பினரும் 30 லட்சத்திற்கு பேசினோம் என்றால் சரியல்ல.

10) இதன் பிறகு தான் தாவா சொத்திற்கு பவர் கொடுக்கப்பட்டது என்றால் அதற்கு முன்பாகவே கிரையம் கொடுக்கப்பட்டது.

11) தாவா சொத்தின் அசல் ஆவணங்களை பவர் பத்திரம் எழுதப்பட்ட பின்பு தான் பிரிதிவாதிகளுக்கு கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. பவர் பத்திரம் எழுதும் முன்பே அவர்களிடம் இருந்து. மேலும் முன்பே அவர்களிடம் கொடுக்கப்பட்டது.

12) பவர் ரத்து செய்யும் முன்பு பிரதிவாதிகளிடம் வாங்கப்பட்ட தொகையினை கொடுத்துவிட்டேனா என்றால் 48 சதவீத வட்டியுடன் திருப்பி கொடுத்துவிட்டேன் தேதி எனக்கு நியாபகம் இல்லை.எவ்வளவு பணம் கொடுத்தேன் என்று தெளிவாக சொல்ல முடியுமா என்றால் எனது மகனுக்கு தெரியும்.

13) நான் பிரதிவாதியிடம் இருந்து வாங்கி பணத்தை கொடுக்க வில்லை என்றாலும் நான் கொடுத்து இருந்தால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்றாலும் சரியல்ல. பிரதிவாதிகள் கடலூர் 1 வது கூடுதல் அமர்வு நீதிமன்றத்தில் OS.127/2021 என்ற வழக்கை மேற்படி கிரையம் ஒப்பந்தம் மற்றும் பவர் பத்திரத்தை அனுசரித்து தாக்கல் செய்துள்ளார்கள் என்றால்

எனக்கு நியாபகம் இல்லை. அதில் நான் என்ன கட்சி செய்கிறோன் என்றோ என்ன ஆட்சேபனை செய்கிறோன் என்றால் எனக்கு நியாபகம் இல்லை.

14) பிரதிவாதிகளிடம் இருந்து நானும் எனது மணைவி மற்றும் எனது மகன் வாங்கிய பணத்தை ஏமாற்ற வேண்டும் என்ற நோக்கில் தான் இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளது என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கு வழக்கு மூலம் ஏதும் இல்லாததால் வழக்கு தள்ளுபடிக்கு அறுகமானது என்றால் சரியல்ல.

ஆவணங்கள் ஏதும் தாக்கல் இல்லை.
குறுக்கு விசாரணை முற்றிற்று.